SRI LANKA

**இலங்கை கணக்கீட்டு தொழிநுட்பவியலாளர்கள் கழகம்**

# மட்டம III பரீட்சை – ஜனவரி 2021

## பரிந்துரைக்கப்பட்ட விடைகளும

# (303) நிதிக் கட்டுப்பாடுகளும் கணக்காய்வும் (FCA)

**இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியாளர்கள் கழகம்**
இல, 640, வென். முறுத்தெட்டுவென ஆனந்த நாகிமி மாவத்தை,
நாரேஹன்பிட்டி, கொழும்பு - 05
தொ.பே - 011 2 559 669

**கல்வி மற்றும் பயிற்சி பிரிவின் வெளியீடு**

**இலங்கை கணக்கீட்டு தொழிநுட்பவியலாளர்கள் கழகம்**

# மட்டம் III பரீட்சை – ஜனவரி 2021

# (303) நிதிக் கட்டுப்பாடுகளும் கணக்காய்வும்

# பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(மொத்தம் 20 புள்ளிகள்)

**பகுதி - A**

## *வினா 01 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

*அத்தியாயம் 01 - வணிக சூழலும் ஆளுகை சட்டக் கட்டமைப்பும்*

| மாற்றம் | வெளிவாரிச் சூழல் காரணிகள் |
|---|---|
| கடன் சேவைகள் மீது ''கடனை காலந்தாழ்த்தித் தீர்ப்பதற்கான சட்ட இசைவு' வழங்கும் அரசாங்கக் கொள்கை. | அரசியல் சூழல் |
| எளிய வரி முறைமையை நடைமுறைப்படுத்தும் அரசாங்கக் கொள்கை. | அரசியல் சூழல் |
| வட்டி வீதங்களில் குறைப்பு. | பொருளியல் சூழல் |
| பௌதிக ரீதியான கூட்டங்கள் மெய்நிகர் கூட்டங்களாக மாற்றப்பட்டமை | தொழில்நுட்ப சூழல் |
| சுகாதார வழிகாட்டல்களைப் பினபற்றுவதறகான சட்டம் மறறும் ஒழுஙகு விதிகளின் அறிமுகம். | சட்ட சூழல் |

*(05 புள்ளிகள்)*

## *வினா 02 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

*அத்தியாயம் 02 - இடர் முகாமைத்துவ கட்டமைப்பு*

SRI LANKA

**(a) இடர் தவிர்ப்பு**

இது இடர்களை தவிர்ப்பதை குறிக்கும். முகாமையானது இடரானது தவிர்க்கப்படமுடியுமா அவ்வாறெனின் இடர் தவிர்ப்பு விரும்பக்கதக்கதா என்பது பற்றி கருத்திற் கொள்ள வேண்டியுள்ளது. இடரொன்றை தவிர்த்தல் எதிர்மறையான பெறுபேறொன்றின் சாத்தியத்தை அகற்றுகின்றது.

உதாரணம் : நட்டத்தை உழைக்கும் வணிக அலகை மூடதல்

*(03 புள்ளிகள் )*

**(b) இடரைக் குறைப்பதறகுப் பயனபடுத்தப்படும் தந்திரோபாயங்கள்**

1. செயற்பாடுகளை பன்முகப்படுத்தல்
2. இடர் பகிருதல்
3. வணிக நிகழத்தக்க திட்டம்
4. செயற்பாட்டு இடர்களிற்கான உள்ளக கட்டுப்பாடு

*(02 புள்ளிகள்)*
*(மொத்தம் 05 புள்ளிகள்)*

## *வினா 03 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

**அத்தியாயம் 04 – உறுதியுரை பணிக்கமர்த்தல்களும் தொடர்புபட்ட சேவைகளும்**

**(a)**

- நன்நெறி மற்றம் தரக் கட்டுப்பாட்டு தேவைப்பாடுகள்
- பணிக்கமர்த்தலை ஏற்றல் மற்றும் தொடர்ந்து நடாத்ததலும்
- திட்டமிடல் மற்றும் நிறைவேற்றுகை
- விடயதானத்தின் பொருத்தப்பாட்டு தன்மையை மதிப்பிடல்
- பொருத்தமான பிரமாணங்களை மதிப்பிடல்
- பொருண்மையாண்மை மற்றும் உறுதியுரை ஈடுபடுத்தல் மீதான இடர்
- சான்றுகளை பெறல்
- ஆவணப்படுத்தல்
- உறுதியுரை அறிக்கையினை தயாரித்தல்

***(03 புள்ளிகள்)***

**(b) உறுதிப்பாட்டு ஈடுபடுத்தல் ஒன்றின் மூலகங்கள்**

- மூன்று தரப்பினர் உறவு
- பொருத்தமான பிரமாணங்கள்
- விடயதானம்
- உறுதியுரை அறிக்கை
- சான்றுகள்

***(02 புள்ளிகள்)***
***(மொத்தம் 05 புள்ளிகள்)***

## *வினா 04 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

**அத்தியாயம் 09 – நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வொன்றிற்கான தேவைப்பாடுகள்**

SRI LANKA

**(a) தனித்தனியான ஈடுபடுத்தலின் தரக் கட்டுப்பாட்டில் கவனத்திற் கொள்ளப்பட வேண்டியவை**

1. பணிக்கமர்த்தல் நிறைவேற்றுகையின் தரத்தில் நிலைபேரானதன்மையை மேன்மையடைய செய்தல்
2. மேற்பார்வை
3. மீளாய்வு ***(02 புள்ளிகள்)***

**(b)**

1. வாடிக்கையாளரின் முதன்மை உரிமையாளர், பிரதான முகாமைத்துவம் மற்றும் அதன் ஆளுகையுடன் பொறுப்பாக்கப்பட்டவர் ஆகியோரின் தனித்துவமும் வணிக நற்பெயரும்.
2. வணிக நடைமுறைகள் உட்பட வாடிக்கையாளர்களின் செயற்பாடுகளின் தன்மை.
3. வாடிக்கையாளரின் முதன்மை உரிமையாளர், பிரதான முகாமைத்துவம் மற்றும் அதன் ஆளுகையுடன் பொறுப்பாக்கப்பட்டவர் ஆகியோரின் கணக்கீட்டு நியமங்கள் மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு சூழல் என்பன தொடர்பான உக்கிரமான வியாக்கியானம் நோக்கிய மனப்பாங்கு தொடர்பான தகவல்கள்.

4. நிறுவனததின் கட்டணத்தை முடிந்த அளவு குறைவாக பேணுவது தொடர்பாக வாடிக்கையாளர் உக்கிரமாக சம்பந்தப்படுகின்றார்
5. வேலையின் நோக்கெல்லை தொடர்பாக பொருத்தமற்ற வரையறைகளுக்கான அடையாளங்கள்.
6. வாடிக்கையாளரின் பணமோசடி அல்லது வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டிருக்கலாம் என்பதற்கான அடையாளங்கள்.
7. நிறுவனத்தின் பிரேரிக்கப்பட்ட நியமனத்திற்கான மற்றம் முந்திய நிறுவனத்தின் மீள்நியமனம் பெறாமைக்கான காரணங்கள்.
8. தொடர்புபட்ட தரப்பினர்களின் தனித்துவமான அடையாளம் மற்றும் வணிக நற்பெயர்.

***(03 புள்ளிகள்)***
***(மொத்தம் 05 புள்ளிகள்)***

***பகுதி A முடிவு***

SRI LANKA

## *வினா 05 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

**அத்தியாயம் 07- கணக்காய்வு அறிக்கையிடல்**

**(a)**

1. இக் கட்டிடமானது 1st மார்ச் 2020 இலிருந்து பயன்பாட்டிற்கு வந்துள்ளது. LKAS 16 இன் பிரகாரம் கட்டிடத்தின் கிரயமானது மூலதனப் புத்துருவாகும் வேலைகளிலிருந்து கட்டிட கணக்கிற்கு மாற்றம் செய்யப்பட வேண்டும். Rs. 1.5 Mn ஆனது 31st March 2020 இல் PPE யின் கீழ் கட்டிடமாக காட்டப்பட வேண்டும்.

   மேலும், LKAS 16 இன் பிரகாரம் .அந்த சொத்து பாவனைக்கு வந்த காலத்திலிருந்து குறிப்பிட்ட கட்டிடத்திற்கான பெறுமான தேய்வானது ஆரம்பிக்கப்பட வேண்டும். அதனடிப்படையில், மார்ச் மாதத்திற்தான பெறுமானதேய்வான Rs. 125,000/- ஆனது 31 மார்ச் 2020 இல் முடிவடைந்த காலப் பகுதிக்கு மார்ச் மாதத்திற்கான பெறுமானதேய்வாக ஏற்பிசைவு செய்யப்பட வேண்டும். பெறுமானதேய்வான Rs. 125,000/- ஆனது of Rs.500,000/- பொருண்மையாண்மை மட்டதடதை விட குறைவாகையினால் கணக்காய்வாளர் அறிக்கை மீது கணிசமான பாதிப்பை ஏற்படுத்தாது.

2. LKAS 2 இன் பிரகாரம், தொக்குகளானவை அவற்றின் கிரயம் அல்லது தேறிய நிகரக் கூடிய பெறுமதி என்பவற்றில் எது குறைவோ அதில்அடையாளப்படுத்தப்பட வேண்டும். ஆகையினால், கம்பனியானது தொக்குகளில் Rs. 5 Mn சீராக்கம் செய்யப்பட வேண்டும் மற்றும் இது கணக்காய்வாளரால் நியமிக்கப்பட்ட பொருண்மை மட்டத்தை விட அதிகமானது. 31st மார்ச் 2020 முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களில் இது ஓர் சீராக்கம் செய்யப்பட வேண்டியதாகும்.

3. முழுமையான தவறுகளானவை நிதிக் கூற்றுக்களில் பொருண்மை வாய்ந்தது மற்றும் முகாமையானது அவற்றை சரிசெய்ய விரும்பாவிடில் கணக்காய்வாளர் அபிப்பிராயத்தை மாற்றம் செய்ய வேண்டும்.

***(07 புள்ளிகள்)***

**(b)**

I. தலைப்பு
II. பெறுநர்
III. அபிப்பிராயத்திற்கான அடிப்படை
IV. தொடர்ந்தியங்கும் தன்மை
V. முக்கிய கணக்காய்வு விடயங்கள்
VI. ஏனைய தகவல்கள்
VII. நிதிக்கூற்றுக்களுக்கான கணக்காய்வு தொடர்பான பொறுப்புக்கள்
VIII. நிதிக்கூற்றுக்களுக்கான கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புகள்
IX. ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ள பங்காளரின் இலங்கை பட்டயக்கணக்காளர் நிறுவனத்தின் அங்கத்தவர் இலக்கம்
X. ஏனைய அறிக்கையிடல் பொறுப்புக்கள்
XI. கணக்காய்வாளரின் கையொப்பம

XII. கணக்காய்வாளரின் முகவரி
XIII. கணக்காய்வாளர் அறிக்கையின் திகதி

*(03 புள்ளிகள்)*
*(மொத்தம் 10 புள்ளிகள்)*

## *வினா 06 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

**(A)**

| **அத்தியாயம் 04 – உறுதியுரை பணிக்கமர்த்தல்களும் தொடர்புபட்ட சேவைகளும்** |
|---|

**கணக்காய்வை ஏற்றுக்கொளவத்றகான தீர்மானததை எடுப்பதற்கு முன்னர் கவனத்திற்கொள்ள வேண்டியவை**

i. கணக்காய்வாளர் ஏன் முன்னைய கணக்காய்வாளர் ஈடுபடுத்தலை ஏற்றுக்கொள்ள மறுத்தார் என்பதை விசாரணை செய்தல் வேண்டும். இது ஏதாவது YP யின் முகாமையுடனான நெறிமுறைசார் சிக்கலினால் ஏற்பட்டதா என்பதை அறிதல் வேண்டும். ஆகையினால் முன்னைய கணக்காய்வாளரிடமிருந்து நெறிமுறைசார் வெளிப்பாட்டை பெறல் அவசியமாகும்.

ii. YP முகாமையின் நேர்மை – ஏன் கம்பனி அந்த நடைமுறையிலுள்ள வழக்கை பற்றி வெளிப்படுத்தவில்லை. நிறுவனம் நேர்மை சிக்கலை கொண்டுள்ளது என்பது பற்றி கணக்காய்வாளர் வேலை செய்ய வேண்டும். ( e.g. நற்பெயருக்கான பாதிப்பு)

iii. சட்ட வழக்கு தொடர்பிலான விபரங்களை பெற்றுக்கொள்ள வேண்டும் அல்லது கணக்காய்வாளர் விசாரயையொன்றை மேற்கொள்ள வேண்டும்.

iv. கணக்காய்வு அறிக்கையினை தயாரிப்பதற்கு குறைந்தளவான காலமே உள்ளமை. முகாமையினால் நிர்ணயிக்கப்பட்ட கால எல்லையை அடைந்து கொள்வதற்கான உண்மையான தேவைப்பாடு உள்ளதா என்பதை மதிப்பீடு செய்து பார்த்தல்.

v. இறுக்கமான காலக்கெடு பகதியும் மற்றும் வரையறுக்கப்பட்ட வளங்களும் மற்றம் தற்போதைய பங்காளர்களால் நிறைவேற்ற வேண்டிய ஏனைய காலவரையறைகளும் காணப்படுவதால் இக் கணக்காய்வை குறிப்பிட்ட காலப் பகுதியில் முடிக்க கூடிய திறமையை ஆராய வேண்டும். சகல மூன்று (03)பங்காளர்களும் சேவை நாடுநர்களின் பெரியளவான காலக்கெடு கணக்காய்வுகளில் ஈடுபடுவதுடன், இரண்டு (02) சிரேட்ட மட்ட அலுவலர்கள் வெளிநாட்டு அலுவலகம் ஒன்றுக்கு அனுப்பப்படுவதால் குறிக்கப்பட்ட காலப்பகுதியில் வேலையை முடிக்க உரிய ஊழியர்கள் உள்ளனரா என்பதை தீர்மானிக்க வேண்டும்.

vi. ஈடுபடுத்தலை ஏற்றுக்கொள்வதற்கு முன்னர் அதனை ஏற்றுக்கொள்ளலில் அடிப்படை கோட்பாடுகளில் இணங்கி கொள்வதற்கான பாதிப்பு ஏதாவது இருக்கின்றதா என்பதை அறிந்து கொள்ளல்.

*(06 புள்ளிகள்)*

**(B)**

**அத்தியாயம் 08- நெறிமுறை தேவைப்பாடுகள்**

1. நிதியியற் அக்கறை
2. கடன்கள் மற்றும் உத்தரவாதங்கள்
3. வணிக உறவு
4. குடும்ப மற்றும் தனிப்பட்ட உறவு
5. கணக்காய்வு வாடிக்கையாளருடன் தொழில் வாய்ப்பு

**(04 *புள்ளிகள்*)**
***(மொத்தம் 10 புள்ளிகள்)***

## *வினா 07 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

**அத்தியாயம் 06- கணக்காய்வு அறிக்கையிடல்**

**(a)** வெளிவாரி உறுதிப்படுத்தல் செயன்முறையின் பலவீனங்கள்

கணக்காய்வாளர் எதிர்க்கணிய உறுதிப்படுத்தலை கோரியுள்ளார்.. பின்வரும் காரணங்களால் கணக்காய்வாளரால் இதனை பயன்படுத்த முடியாது.

I. பெரியளவு மீதிகளுடன் சிறியளவான வாடிக்கையாளரகள் மாத்திரமே உள்ளமையால் கணக்காய்வாளர் நோர்க்கணிய உறுதிப்படுத்தலை கேட்டிருக்கலாம்.

II. வியாபார வருமதிகள் இருப்பதனால் பொருண்மை பிறழக்கூற்று இடர் உயரவாக இருக்கிது என கணக்காய்வாளர் மதிப்பிட்டுள்ளார் ஆகையினால் நோரான உறுதிப்படுத்தலை கோரல் முக்கியமானதாகும்.

I. வியாபார வருமதிகளின் உள்ளதாம் தன்மையை உறுதிப்படுத்த தனிப்பட்ட கணக்காய்வு நடைமுறையாக உறுதிப்படுத்தல் செயன்முறையானது செயற்படுகின்றது.

II. தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு வாடிக்கையாளரின் மீதியை உறுதிப்படுத்துவதற்காக கடிதம் ஒன்றை அனுப்ப வேண்டாம் என பிரதம நிறைவேற்று அதிகாரி கணக்காய்வாளரிடம் கோரிக்கை விடுத்தமை.

***(04 புள்ளிகள்)***

**(b)**

I. மறுப்பிற்கான காரணத்தை விசாரணை செய்தல் மற்றும் உறுதிப்பாடு மற்றும் நியாயத்தன்மைக்கான கணக்காய்வு சான்றுகளை தேடல்.

II. முகாமையின் மறுப்பினால் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று தொடர்பிலான உரிய இடர்கள் மற்றும் மோசடியின் காரணமாக பொ பொருண்மையான பிறழ்கூற்று தொடர்பிலான இடர்கள் உள்ளடங்கலாக, கணக்காய்வு செயன்முறையின் தன்மை நேரம் மற்றும் அளவினை தீர்மானித்தல்.

III. தொடர்புபட்ட மற்றும் நம்பகதன்மையான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்ளல் தொடர்பில் மாற்றீட்டு கணக்காய்வு செயன்முறையை செய்முறைப்படுத்தல்.

***(02 புள்ளிகள்)***

**(B)**

**கணக்காய்வாளர் மேற்கொள்ளக்கூடிய விசாரணைகள்**

- புதிய கடமைகள், கடன் வாங்குதல் அல்லது உத்தரவாதங்கள் உள்ளிட்டவை ஏற்படுத்தப்பட்டுள்ளனவா.
- சொத்துக்களின் விற்பனை அல்லது வகைப்படுத்தல் நிகழ்ந்ததா அல்லது திட்டமிடப்பட்டுள்ளதா.
- புதிய பங்குகள் அல்லது கடன் பத்திரங்களின் வெளியீடு போன்ற மூலதனத்தின் அதிகரிப்பு அல்லது கடன் கருவிகளை வழங்குதல் இடம்பெற்றுள்ளதா அல்லது ஒன்றிணைக்க அல்லது கலைக்க ஒரு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதா அல்லது திட்டமிடப்பட்டுள்ளதா.
- ஏந்தவொரு சொத்துக்களும் அரசாங்கத்தால் கையகப்படுத்தப்பட்டதா அல்லது அழிக்கப்பட்டதாதது உதாரணமாக தீ அல்லது வெள்ளத்தால்.
- நிகழத்தக்கவைகள தொடர்பில் ஏதேனும் முன்னேற்றங்கள் ஏற்பட்டிருக்கிறதா.
- ஆசாதாரண கணக்கியல் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா அல்லது சிந்திக்கப்பட்டுள்ளதா.
- நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகள் அல்லது மதிப்பீடுகள் குறித்த அளவீட்டுடன் தொடர்புடைய ஏதேனும் நிகழ்வுகள் நிகழ்ந்தனவா.
- சொத்துக்களது மீளப்பெறும் இயலுமைக்கு தொடர்புபட்ட நிகழிவுகள் ஏதேனும் நிகழ்ந்துள்ளனவா.

***(04 புள்ளிகள்)***

***( மொத்தம் 10 புள்ளிகள்)***

***பகுதி B முடிவு***

SRI LANKA

## வினா 08 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**அத்தியாயம் 03- உள்ளக கட்டுப்பாடுகள் மற்றும் வணிக செயன்முறைகள்**

**(A)**

**(a)**

**உள்ளகக் கட்டுப்பாட்டுப் பலவீனங்கள்**

1. முகாமைப் பணிப்பாளரின் மனைவி திருமதி நிலானி விலைப்பட்டியலிடல் மற்றும் நிலுவைச் சேகரிப்புச் செயன்முறையைக் கண்காணித்தல் ஆகியவற்றில் ஈடுபடுகின்றமையானது உரிய வேலைப் பிரிப்பின்மையை காட்டுகின்றது.
2. பொருட் கொள்வனவுகள் பற்றிய பதிவுகள் மற்றும் செய்யப்பட்ட கொடுப்பனவுகளுக்கான சான்று ஆவணங்கள் என்பன முறையாகப் பேணப்படவில்லை.
3. தற்போதைய ஊழியர் கணக்கீடு அல்லது நிதி பற்றிய பின்னணி எதையும் கொண்டிருக்கவில்லை.
4. கடந்த 3 ஆண்டுகளுக்கான நிதிக் கூற்றுக்கள் கம்பனியால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.
5. முகாமைப் பணிப்பாளர், பொருட்கள் மற்றும் ஏனைய வழங்கல்களைப் பெற்றுக் கொள்வதில் (கொள்வனவு செய்வதில் தனிப்பட்ட ரீதியில் ஈடுபடுகின்றார்.

***(03 புள்ளிகள்)***

**(b)**

| கட்டுப்பாட்டு வகை | விபரம் | உதாரணம் |
|---|---|---|
| **செயற்பாட்டுக் கட்டுப்பாடுகள்** | செயற்படுத்துகை கட்டுப்பாடுகள் என்பன வணிக செயற்பாடுகளின. வினைத்திறன் அல்லது விளைதிறன் இழப்புக்களின் இடர்களைக் குறைப்பதற்கான கட்டுபாடுகளை குறிக்கும். | கையேடுகளில் கொடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களிற்கு இணங்க பொயியை பராமரித்தல். |
| | | களஞ்சியசாலையில் கட்டுப்பாடுகளை |
| | | தொழிற்சாலை வளாகத்தின் நுழைவாயிலில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களை அமர்த்திக் கொள்ளல் அல்லது கண்காணிப்புக் கருவிகளை பொருத்திக் கொள்ள முடியும். |
| **நிதிக் கட்டுப்பாடுகள்** | கணக்கீட்டு செயன்முறைகள மற்றும் நிதியியல் அறிக்கையிடலில் எழுகின்ற வழுக்கள் மற்றும் மோசடிகளின் இடர்களை குறைத்து கொள்வதற்கு நிதியியல் கட்டுப்பாடுகள் அமுல்படுத்தப்படுகின்றன. | அனைத்து விற்பனை பட்டியல்களையும் தொடர் ஒழுங்கிற்கு அமைவக பதியப்பட்டிருத்தல். |
| | | அனைத்து கொடுப்பனவு சிட்டைகளையும் தொடர் ஒழுங்கிற்கு அமைவக பதியப்பட்டிருத்தல். |
| | | கொடுப்பனவு சிட்டைகள் யாவும் கொள்வனவு கட்டளைகள், பொருள் பெறுவனவு குறிப்புக்கள், மற்றும் புறநிரையான ஆதாரங்களுடன் ஆதாரப்படுத்தப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | காசோலைகள் 2 அதிகாரிகனால் கையொப்பமிடல் |
| | | மேலதிக பிரதிகளை தவிாபதற்கு செயன்முறையை நடைமுறைப்படுத்தல். |
| | | ஊழியரிக் கொடுப்பனவு கோரிக்கைக்கான கொடுப்பனவிற்கு அதற்கான அங்கீகாரம் கட்டாயமானதாகும். |
| **இணக்கக் கட்டுப்பாடுகள்** | சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்காமை தொடர்பான இடரை குறைக்கும் கட்டுப்பாடுகள் இணக்க கட்டுப்பாடுகள் ஆகும். | கம்பனியின் உணவுகளானவை சுகாதார வழிநடத்தல்களிற்கு ஏற்ப செயற்படுத்தப்பட்டதா |
| | | உற்பத்தி திகதி மற்றும் காலாவதியாகும் திகதி என்பன உள்நாட்டு அதிகாரசபை சட்டத்திற்கு ஏற்ப தெளிவாக மேற்கொள்ளப்பட்டதா |

***(06 புள்ளிகள்)***

**(c) பிரதான வணிகச் செயன்முறைகள்**

1. காசு முகாமைத்துவ செயன்முறை
2. கொள்வனவு செயன்முறை
3. பட்டியல் செயன்முறை
4. நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பு செயன்முறை
5. இருப்பு சரக்கு முகாமைத்துவ செயன்முறை
6. சம்பளப் பட்டியல் செயன்முறை
7. ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் செயன்முறை

***(04 புள்ளிகள்)***

**(d) IT பொது கட்டுப்பாடு மற்றும் IT பிரயோக கட்டுப்பாடு IT – தகவல் தொழிற்நுட்பம்**

**IT பொது கட்டுப்பாடு**

பொது தகவல் கட்டுப்பாடுகளின் நோக்கம் உள்ளகக் கட்டப்பாட்டின் ஒட்டு மொத்த நோக்கங்கள் அடையப்பட்டுள்ளன என்பதை ஓர் நியாயமான அளவில் உறுதிப்பாட்டை வழங்குவதற்கு கணணி தகவல் செய்முறையின் மீது ஒட்டுமொத்தக் கட்டுப்பாட்டின் ஒரு சட்டக் கட்டமைக்பொன்றை தயாரிப்பதாகும். தகவல்களை அணுகுதல் மீதான பாதுகாப்பு தகவல் நிலையம் மற்றும் வலைப்பின்னல் செயற்பாடுகள் மென்பொருள் கையேற்பு அபிவிருத்தியும் பராமதித்தலும் என்பவற்றை உள்ளடக்கும்.

**IT பிரயோக கட்டுப்பாடு**

பிரயோக கட்டுப்பாடுகளின் நோக்கம் அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் அங்கீகரிக்கப்பட்டுள்ளதும் பதிவு செய்யப்பட்டவையும் அத்துடன் பூரணமாக மிக துல்லியமாக சரியான நேதத்தில் செய்முறைக்கு உட்பட்டவையாகும் ஆகும் என நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு கணக்கீட்டு பிரயோகத்தின் மீது குறித்த கட்டுப்பாட்டு நடைமுறைகளை ஏற்படுத்துவதாகும்.

***(03 புள்ளிகள்)***

aat SRI LANKA

(B)

**(a)** கட்டுப்பாடுகளின் பல்வேறுபட்ட உள்ளார்ந்த வரையறைகள் காரணமாக உள்ளக கட்டுப்பாடுகளில் வினைத்திறனின்மை காணப்படலாம்.

- கட்டுப்பாடுகள் சிறந்த முறையில் வடிவமைக்கப்படாதிருத்தல்.
- கட்டுப்பாடுகள் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட போதிலும் அவற்றின் நடைமுறைப்படுத்தலில் வினைத்திறனின்மை.
- மனித வழுக்கள்
- மோசடி

ஆகையினால் உள்ளக கட்டுப்பாட்டு முறையை கொண்ட பின்னரும் அது தவறுகளை முழுமையாக அகற்ற முடியாது மற்றும் மேற்கூறிய நண்பரின் கூற்று தவறானதாகும்.

***(04 புள்ளிகள்)***

**(b) உள்ளக கட்டுப்பாட்டு செயன்முறை**

உரிமம் ஒன்றின் நிதியியல் அறிக்கைப்படுத்தலின் நம்பகத்தன்மை செயற்பாட்டின் வினைதிறன் மற்றம் விளைதிறன் அத்துடன் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணக்கம் கொண்டுள்ளமை என்பன் தொடர்பாக நோக்கங்களை அடைதல் பற்றி நியாாமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு ஆளுகை, முகாமை ஆகியவற்றுடன் பொறுப்பானவர்கள் மற்றும் ஏனைய ஆளணியினர் ஆகியோரால் வடிவமைக்கப்பட்டதும் அமுல்படுத்தப்பட்டதும் மற்றும் பேணப்பட்டதுமான செயன்முறையாகும்.

***(04 புள்ளிகள்)***

**(c) COSO இன் படி, உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை**

1) கட்டுப்பாட்டு சூழல்
2) இடர் மதிப்பீடு
3) கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்
4) தகவல் மற்றும் தொடர்பாடல்
5) கண்காணித்தல்

***(02 புள்ளிகள்)***
***(மொத்தம் 25 புள்ளிகள்)***

***வினா 09 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :***

**அத்தியாயம் 5 - இடர் மதிப்பீடு மற்றும் கணக்காய்வு செயன்முறை**

(A)

**(a) விசேட கவனம் தேவைப்படும் நான்கு பகுதிகள்**

1. முதலீடுகள்
2. தொக்கு
3. வருமானம்
4. உபகாரப் பணம்
5. தொடர்புபட்ட தரப்பினர் உறவு முறை
6. ஆதனம் பொறி மற்றும் உபகரணம்
7. தேறிய இலாபம்

***(05 புள்ளிகள் )***

**(b) ஈடுபடுத்தல் கடிதத்தின் கட்டுறுப்புகளைத் திருத்துவதற்கு, கணக்காய்வாளர் கவனத்திற் கொள்ள வேண்டிய நிபந்தனைகள்**

- முகாமை கணக்காய்வின் நோக்கம் மற்றும் பரப்பெல்லையை தவறாக புரிந்து கொண்டதற்கான ஏதேனும் அறிகுறிகள்
- குணக்காய்வு பணிக்கமர்த்தலின் ஏதேனும் திருத்தப்பட்ட அல்லது விசேட விதிமுறைகள்
- உரிமையிலானதோர் முக்கிய மாற்றம்
- உயர் முகாமையிலான சமீபத்திய மாற்றம்
- நிறுவனத்தின் அளவு அல்லது தன்மையில முக்கிய மாற்றம்
- சட்டங்கள அல்லது ஒழுங்கு விதிகளிலான மாற்றம்
- நிதி அறிக்யையிடல் சட்டகத்திலான மாற்றம்
- பிற அறிக்கையிடல் தேவைப்பாடுகளிலான மாற்றம்

***(03 புள்ளிகள்)***

**(c) கணக்காய்வாளரால் ஆற்றப்பட வேண்டிய கணக்காய்வு நடைமுறைகள்**

- பொருண்மை மற்றும் கணக்காய்வு இடர்
- கணக்காய்வு நடைமுறைகளின் இயல்பு நேர அளவு மற்றும் பரப்பெல்லை.
- போதுமான பொருத்தமான கணக்காய்வு சான்றுகள் பெறப்பட்டுள்ளதா என்பதற்கான மதிப்பீடு
- பெறப்பட்ட கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் முடிவுகளை மேற்கொள்ளல்
- பிரயோகிக்கதக்க நிதி அறிக்கையிடல் சட்டகத்தை பயன்படுத்துவதிலான முகாமையின் சுயதீர்ப்புகளின் மதிப்பீடு

***(03 புள்ளிகள்)***

**(d) கணிசமான இடர்**

கணிசமான இடரின் போது விசேட கணக்காய்வு கவனம் செலுத்தப்படும். இடர் மதிப்பீட்டின் ஒரு பகுதியாக கணக்காய்வாளர் ஏதேனும் இடர் காணப்படுகின்றதா என்பதை மதிப்பிட வேண்டும். பின்வரும் காரணிகளானவை கணிசமான இடரிற்கான காரணிகளாகும்.

- மோசடி இடர்
- இது ஓர் வழமைக்கு மாறான ஊடுசெயல்
- தொடர்பு பட்ட தரப்பினருடனான ஊடுசெயல்
- ஊடுசெயலின் சிக்கல் தன்மை

CEO இன் உபகாரப் பணமானது விற்பனை மற்றும் இலாபத்திலினால் தீர்மானிக்கப்படுகின்றது. ஆகையினால், வருமானத்தை கூட்டி காட்டுவதற்கதன போக்கு காணக்ப்படுதனால் இது ஓர் கணிசமான இடராகும்.

***(04 புள்ளிகள்)***

**(e) விற்பனை தொடர்பாக கணக்காய்வு நடைமுறைகள்**

1. கடந்த வருட வருமானத்தை இவ் வருடத்துடன் ஒப்பீடு செய்தல்.
2. உரிய காலப் பகுதிக்கான வருமானத்திற்கு உரிய சகல கொடுக்கல் வாங்கல்களும் ஏற்பட்டள்ளதை உறுதி செய்தல்.
3. முற்கூட்டிய இலக்கமிடப்பட்ட பட்டியல்களை பயன்படுத்துகிறதா என பரிசீலனை செய்தல் மற்றும் பட்டியல் மாதிரிகளை பரிசீலித்தல்.
4. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு பின்னர் ஏதேனும் விற்பனை திரும்பல்கள் இருக்கா என பரிசீலித்தல்.

5. குறுக்கு வெட்டு பரிசீலனைகளை மேற்கொள்ளல்.
6. குறிப்பிட்ட காலப்பகுதிக்கான சகல வருமானங்களும் பதியப்பட்டுள்ளமையை உறுதிப்படுத்தல்.
7. வருமானத்துடன் தொடர்புடைய ஊடுசெயல்கள் மற்றும் நிகழ்வுகளுடன் தொடர்புடைய சகல பெறுமதிகள் மற்றும் ஏனைய தகவல்கள் பதியப்பட்டனவா என்பதை சரி பார்த்தல்.
8. வருமான ஏற்பிசைவு புள்ளி – விநியோக குறிப்புக்களை பரிசீலனை செய்தல்
9. கம்பனியால் விற்கப்பட்ட பொருட்களின் விலைப் பட்டியலை பரீசிலித்தல்.

*(04 புள்ளிகள்)*

**(B)**

*அத்தியாயம் 06 – கணக்காய்வு சான்றுகள்*

**(a) நிதிசார் குறிகாட்டிகள்**

1. நிதிப் பரிப்பு அல்லது நிகர நடைமுறை பரிப்பு நிலைமை
2. புதுப்பித்தல் அல்லது திருப்பி செலுத்துவதற்கான யதார்த்தமான வாய்ப்புக்களற்ற முதிர்வை நெருங்கும் நிலையான கால கடன்கள்.
3. குடன் வழங்குநர்களால் நிதிசார் உதவிகள் திரும்ப பெறப்படுவதற்கான குறிகாட்டிகள்.
4. பாதகமான முக்கிய நிதி விகிதங்கள்
5. பெருமளவு தொழிற்பாட்டு நட்டங்கள் அல்லது காசுப் பாய்ச்சல்களை உருவாக்க பயன்படும் சொத்துக்களின் மதிப்பிலான கணிசமான வீழ்ச்சி
6. செலுத்தப்படாத அல்லது தொடரப்படாத பங்கிலாபங்கள்
7. கடன்கொடுத்தோருக்கு உரிய திகதியில் கொடுப்பனவு செய்ய இயலாமை
8. கடன் ஒப்பந்தங்களின் விதிமுறைகளுக்கு இணங்க இயலாமை.
9. வழங்குநர்களுடனான ஊடுசெயல்கள் கடனிலிருந்து பண முறைக்கு மாற்றமடைதல்

SRI LANKA

*(03 புள்ளிகள்)*

**(b) கணக்காய்வு நடைமுறைகள்**

1. காசுப் பாய்ச்சல் இலாபம் மற்றம் பிற தொடர்புடைய முற்துணிவுகளை பகுப்பாய்வு செய்து முகாமையுடன் கலந்துரையாடல்
2. நிறுவனத்தின் அண்மைய கிடைக்க கூடிய இடைக்கால நிதிக் கூற்றுக்கள் அல்லது முகாமை கணக்குகளை பகுப்பாய்வு செய்து கலந்துலையாடல்.
3. தொகுததிக்கடன் பத்திரங்கள் மற்றும் கடன் ஒப்பந்தங்களின் விதிமுறைகளை மீளாய்வு செய்தல்.
4. நிதிசார் சிக்கல்கள் தொடர்பில் பங்குதாரர்கள் , இயக்குநர்கள் சபை மற்றும் முக்கியமான குழுக்களின் கூட்ட அறிக்கைகளை வாசித்தல்.
5. வழக்கு மற்றும் உரிமை கோரல்கள் தொடர்பாக நிறுவனத்தின் வழக்கறிஞரிடம் விசாரித்தல்.
6. தொடர்ர்டைய மற்றும் மூன்றாம் தரப்பினருடன் நிதி ஆதரவை வழங்க அல்லது பராமரிக்க ஏற்பாடுகள் காணப்படுதல் சட்டபூர்வமான தன்மை மற்றும் செயற்படுத்தக் கூடிய தன்மையை உறுதிப்படுத்தல்.
7. மேலதிக நிதியை வழங்குவதற்கான அத்தகைய தரப்பினர்களின் நிதி இயலுமையை மதிப்பிடுதல்

8. நிறைவேற்றப்படாத வாடிக்கையாளர்கள் கட்டளைகள் தொடர்பான நிறுவனத்தின் நிதி இயலுமையை மதிப்பிடுதல்
9. உரிமத்தின் தொடர்ந்து இயங்கும் திறனைப் பாதிக்கும் உருப்படிகளுக்கான கால முடிவிற்கு பின்னான நிகழ்வுகளை மீளாய்வு செய்தல்.
10. கடன்பெறும் வசதிகளின் காணப்படுகை விதிமுறைகள் மற்றும் போதுமான தன்மையை உறுதிப்படுத்தல்.
11. ஒழுங்குமுறை நடவடிக்கைகளின் அறிக்கைகளைப் பற்றி மீளாய்வு செய்தல்.

***(04 புள்ளிகள்)***

***(மொத்தம் 25 புள்ளிகள்)***

***பகுதி C முடிவு***

***Notice:***

These answers complied and issued by the Education and Training Division of AAT Sri Lanka constitute part and parcel of study material for AAT students.

These should be understood as Suggested Answers to question set at AAT Examinations and should not be construed as the "Only" answers, or, for that matter even as "Model Answers". The fundamental objective of this publication is to add completeness to its series of study texts, designs especially for the benefit of those students who are engaged in self-studies. These are intended to assist them with the exploration of the relevant subject matter and further enhance their understanding as well as stay relevant in the art of answering questions at examination level.

*© 2021 by the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka). All rights reserved. No part of this document may be reproduced or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without prior written permission of the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*